## சுருக்கம்

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை – கலையும் பண்பாடும் – நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2012–2013 ஆம் ஆண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குவதற்காக நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### சுற்றுலா,பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.61 நாள். 28.03.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044, பங்குனி–16

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.183, சுற்றுலா மற்றும் பண்பாடு (பண்–2) துறை, நாள்.12.10.2011.
2. அரசாணை (நிலை) எண்.178, சுற்றுலா மற்றும் பண்பாடு (பண்–2) துறை, நாள்.24.08.2012.
3. முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு ஆணையர் அவர்களின் நேர்முகக் கடித எண். 4523/இ2/2012, நாள்.17.9.2012.
4. முதன்மைச் செயலாளர் / கலைப்பண்பாட்டு இயக்கக ஆணையரின் கடிதம் ந.க. எண்.4523/இ2/2012, நாள் 4.12.2012 மற்றும் 7.12.2012.
5. அரசாணை (நிலை) எண்.56, சுற்றுலா,பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை, நாள்.21.3.2013.

-----

**ஆணை:**

நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு நலிந்த கலைஞர் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று வரும் கலைஞர் இயற்கை எய்தி விட்டால் அவருடைய மரபுரிமையரான மனைவி / கணவருக்கு இந்நிதியுதவி மாற்றி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவியாக ரூ.1000/– வீதம் அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2011–2012 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு 1.8.2011 முதல் மாதந்தோறும் ரூ.1000/– வீதம் அவர்தம் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி அளித்திட ரூ.40.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் நலிந்த கலைஞர் நிதியுதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான கலைஞர்களின் தனிப்பட்ட ஆண்டு வருமான வரம்பை ரூ.12,000/–லிருந்து ரூ.60,000/–ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

இந்த உயர்த்தப்பட்ட ஆண்டு வருமானம் நலிந்த கலைஞர்கள் நிதியுதவித் தொகை பெறுபவர் இறக்க நேரிடும் போது அவரது கணவர் / மனைவி பெயருக்கு அவ்வோய்வூதியத்தை மாற்றும்போதும் பொருந்தும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

4. மேலே மூன்றாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், 2012–2013 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 1000 நலிந்த கலைஞர்களுக்கு அவர்தம் வாழ்நாள் வரையில் மாதந்தோறும் தலா ரூ.1000/– வீதம் வழங்குவதற்கும், நடப்பு ஆண்டு செலவினமாக ரூ.80.00 இலட்சம் தொகையினை விடுவித்து உரிய ஆணை வழங்குமாறு முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், 2012–2013 ஆம் ஆண்டுக்கான நலிந்த கலைஞர்களை தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட உள்ள தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்க உத்தேசித்துள்ள நலிந்த கலைஞர்களின் பெயர் விபரம் தெரிவுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு பின்னர் அவர்களின் பெயர்ப் பட்டியல் அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2012–2013 ஆம் ஆண்டுக்கான 500 நலிந்த கலைஞர்களைத் தெரிவு செய்ய ஏதுவாக, புதிய தெரிவுக் குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

6. மேலே பத்தி 4ல் உள்ள முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையர் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

அ. 2012–2013 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு 01.03.2013 முதல் மாதந்தோறும் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் அவர்தம் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி அளித்திட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

ஆ. மேலே பத்தி 6 (அ)–வில் அனுமதி அளிக்கப்பட்ட 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்க 2012–2013 ஆம் ஆண்டு செலவினமாக ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

இ. நலிந்த கலைஞர்களின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்ந்தெடுக்க நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் / வழிமுறைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 6 (ஆ)–வில் ஒப்பளிக்கப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

“2205 – 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் –I திட்டத்தில் சேராதது – AA கலைஞர்களுக்கும், சிறந்த எழுத்தாளர்களுக்கும் ஊக்கமளித்தல் – 09 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”.
(த.தொ.கு.2205 00 102 AA 0914)

8. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினங்களுக்காக கூடுதல் நிதி 2012–2013 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. இவ்வாணையின் பொருட்டு, நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையைப் பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்

தலைவருக்கு வழங்கிட முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

10. மேலே பத்தி 6(ஆ)–வில் நிதியுதவி அனுமதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், நிதியுதவியினை வழங்குவதற்குரிய கொடுப்பாணையினை (Authorization) வழங்குமாறு தமிழ்நாடு மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. 2012–2013 ஆம் ஆண்டுக்கான 500 நலிந்த கலைஞர்களை தேர்வு செய்ய அமைக்கப்படவுள்ள தேர்வுக்குழுவால் தேர்ந்துக்கப்பட்ட பட்டியலை அரசுக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண்.164/துசெ(க.மு)/2013, நாள்.28.03.2013ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
கலைப் பண்பாட்டு இயக்ககம், சென்னை –8.
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை – 28.
உறுப்பினர் – செயலாளர், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம்,
சென்னை–28.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (கணக்குகள்), சென்னை– 9/18.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு/தெற்கு/வடக்கு), சென்னை–5/35/79.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
நகல்:–
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் அலுவலகம், கிண்டி, சென்னை–25.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர், நிதித் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் ( பண்–1/பொது)துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II/வ.செ.பொ.1/வ.செ.பொ.II)த் துறை, சென்னை–9.
மேலாளர், தேசிய தகவல் மையம், சென்னை–9.
பதிவாளர், தமிழ்நாடு தகவல் உரிமை ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை–18.
இகோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்